# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (27.09.2023 முதல் 01.10.2023)

**அறிக்கைஎண் 077/2023** **தேதி.26.09.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 22.09.23முதல் 25.09.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 35°C ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 64 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16-18 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (22.09.2023 முதல் 25.09.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 01.10.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22/09 | 23/09 | 24/09 | 25/09 | தேதி | நாள்-1 27/09 | நாள்-2 28/09 | நாள்-3 29/09 | நாள்-4 30/09 | நாள்-5 01/10 |
| 3.7 | 5.9 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 2 | 3 | 2 | 10 |
| 34 | 35 | 34 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 32 | 32 | 32 |
| 24 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 22 | 22 | 21 | 21 |
| 5 | 5 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 7 | 8 | 8 | 5 |
| 77 | 74 | 83 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 80 | 80 |
| 77 | 70 | 70 | 64 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 50 | 50 | 60 | 50 |
| 16 | 18 | 17 | 17 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 18 | 16 | 18 | 18 | 18 |
| 200 | 200 | 200 | 200 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (27.09.2023 முதல் 01.10.2023)

வரும் நாட்களில்வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80

சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர்மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாகஉள்ள அடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **27-09-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **28-09-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **29-09-2023** | 2.0 | 5.0 | 4.0 | 3.0 | 4.0 | 7.0 | 5.0 | 3.0 | 2.0 | 1.0 | 7.0 | 2.0 | 4.0 |
| **30-09-2023** | 1.0 | 5.0 | 6.0 | 2.0 | 4.0 | 7.0 | 4.0 | 2.0 | 1.0 | 0.0 | 7.0 | 0.0 | 3.0 |
| **01-10-2023** | 8.0 | 10.0 | 12.0 | 8.0 | 9.0 | 13.0 | 8.0 | 8.0 | 8.0 | 7.0 | 13.0 | 7.0 | 7.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு மேற்கு மண்டல உட்பகுதிகளில் இலேசானது முதல் மிதமான மழையுடன் 10 -20 கி.மீ வரையிலும் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும் மற்றும் நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும்.<br>மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம்.<br>மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் நீர் மற்றும் பயிர் சத்துக்கள் உறிஞ்சுவது குறைவாக காணப்படும். ஆதலால் தழைச் சத்து உரங்களை வேப்பபுண்ணாக்கு அல்லது தார் கலந்து இடவேண்டும். இதனால் சத்துக்கள் உபயோகிப்புத்திறன் அதிகமாக இருக்கும். |
| சோளம் | அறுவடை | மழை எதிர்பார்க்கப்படுவதால் தானியங்கள் மற்றும் சிறு தானியங்கள் அறுவடையை தள்ளி போடவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | பூக்கும் பருவம் | மழை எதிர்பார்க்கப்படுவதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும் மற்றும் நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும்.<br>மேகமூட்டம் காரணமாக பருத்தியில் தழைவளர்ச்சியனைக் கட்டுப்படுத்த 15வது கணுவிற்குமேல் கிள்ளி விடவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 16-18 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.<br>மேக மூட்டத்துடன் தூறலும் கலந்து காணப்படுவதால் ஒரு சில இடங்களில் மஞ்சளில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து நோய் தென்பட்டால் குளோரோதளானில் 2மிலி அல்லது புரோபிக்கோனொஸோல் 2கி என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| தென்னை | | தென்னை மரங்களைச் சுற்றிலும் வட்டபாத்தியினை ஆழப்படுத்தி மழைநீரை வேர்பகுதியில் சேமிக்க வழி செய்யவும். |
| கால்நடை | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும்.<br>தற்போதைய வானிலை கறவை மாடுகளில் மடுவீக்க நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவவும். |

## குறுஞ்செய்தி

- காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக உள்ளதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோயினைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 1 கிலோ மேங்கோசெப் (அ) 1.25 கிலோ காப்பர் ஆக்சி குளோரைடு மருந்தினை தெளிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**